பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.பி.

மலர்: 20] சென்னை: புரட்டாசி 27 (13—10—72) வெள்ளி   வெளியூர்: புரட்டாசி 28 (14—10—72) சனி [இதழ்: 100

குறுகிய காலத்தில் பலன் தரும் தென்னை

மூன்றாண்டுகளில் தேங்காய் கொடுக்கக்கூடிய தென்னை வித்து ஒன்றை நீலேசுவரத்தில் உள்ள தென்னை ஆராய்ச்சி நிலையம் உருவாக்கியிருக்கிறது.

இந்த வித்து இடப்பட்ட 34-வது மாதத்தில் பலன் கொடுத்தது.

இதில் மரத்துக்கு 60-லிருந்து 65 காய்கள் ஆண்டுக்குக் கிடைத்தன. தொடக்கக் கட்டத்தில் இளநீர்க் காய்கள் அதிகம் உதிர்ந்துவருகின்றன; அதைத் தவிர்த்துக் காய்கள் உற்பத்தியை அதிகப்படுத்த இப்போது முயற்சிகள் நடைபெறுகின்றன.

பேரறிஞர் அண்ணாவுக்கு

சென்னை நகரில் மணிமண்டபம்

கைத்தறியாளர் துயர் துடைக்கத் தி. மு. கழகத்தின் பணி

நாடாளுமன்ற — உள்ளாட்சிமன்ற உறுப்பினர்களும் சொத்துக் கணக்குக் காட்டக் கோரிக்கை

தலைமைச் செயற்குழு முடிவு — பொதுக்குழுவுக்குப் பரிந்துரை

சென்னை, அக். 13—

கைத்தறியாளர்கள் துயர்துடைக்க முன்பு ஒரு முறை தி. மு. கழகத் தலைவர்களும் — தி. மு. கழகத் தோழர்களும் கைத்தறித் துணிகளை விற்பனை செய்ததுபோல், இப்போதும் நெசவாளர்கள் துயர்துடைக்க இத்திங்கள் 29-ஆம் நாளன்று கைத்தறித் துணிகளைத் தமிழ்நாட்டின் எல்லா ஊர்களிலும் விற்பனை செய்து கைத்தறித் துணித் தேக்கத்தை நீக்குவதன் மூலம், கைத்தறியாளர்கட்குத் துணை நிற்பது என்று தி.மு.க. தலைமைச் செயற்குழு தீர்மானித்து — பொதுக்குழுவுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

தமிழக அமைச்சர்கள் — சட்டமன்றங்களின் இரு அவைத் தலைவர்கள் — உறுப்பினர்கள் ஆகியோர் தங்கள் சொத்துக் கணக்குகளையும் தங்கள் குடும்பத்தினர் சொத்துக் கணக்குகளையும் குறிப்பிட்ட கால முறைகளில் உரிய அவைமுன் தெரிவித்தல் வேண்டுமென முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் 1969 ஆகஸ்டு 27-ல் தமிழகச் சட்டமன்றத்தில் முன்மொழிந்து நிறைவேற்றிய தீர்மானம் நடைமுறையில் இருப்பதையொட்டி அதைத் தொடர்ந்து —

(அ) மாநகராட்சி மேயர்கள் — துணை மேயர்கள் — மாநகராட்சி உறுப்பினர்கள் — நகராட்சித் தலைவர்கள் — நகராட்சித் துணைத் தலைவர்கள் — ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் — ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவர்கள் ஆகியோர் தங்கள் சொத்துக் கணக்குகளையும் குறிப்பிட்ட கால முறைகளில் அவர்கள் பொறுப்பு வகிக்கும் மன்றங்களின் முன்பு தெரிவிக்குமாறு வழிவகைகளைக் காண மாநில அரசைக் கேட்டுக்கொள்கிறது.

(ஆ) நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்கள் சொத்துக் கணக்குகளையும் — தங்கள் குடும்பத்தினர் சொத்துக் கணக்குகளையும் குறிப்பிட்ட கால முறைகளில் தெரிவிக்க வேண்டுமென்ற வழிமுறை விதிக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது என்ற தீர்மானத்தை தி.மு.க. தலைமைச் செயற்குழு பொதுக்குழுவுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

சென்னையில் தி.மு.க. அறக்கட்டளைச் சார்பாக ஆபட்ஸ்பரி அருகே வாங்கப்பட்டுள்ள திடலில் அறிஞர் அண்ணா மணிமண்டபமும் — அறிவாலயமும் ஏற்படுத்த அந்த டிரஸ்டின் சார்பில் நிதி வசூலிக்க தி.மு.க. தலைமைக் கழகத்தைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, ஒவ்வொரு மாவட்டக் கழகமும் ஒரு ரூபாய் நன்கொடை சீட்டுக்கள் மூலம் பெருந்தொகை வசூலித்து நவம்பர் இறுதியில் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி டிரஸ்டுக்கு வழங்குவதென்றும் செயற்குழு தீர்மானித்துப் பொதுக்குழுவுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

நேற்று காலை திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழுக் கூட்டம், மயிலை இராஜேசுவரி திருமண மண்டபத்தில் தொடங்கியது.

எம். ஜி. ஆர். அவர்களைத் தவிர செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் வருகை தந்திருந்தனர்.

செயற்குழுவில் சிறப்பு அழைப்பாளர்களாக அமைச்சர்கள் செ. மாதவன், சி. பா. ஆதித்தனார், ஓ. பி. இராமன், எஸ். இராமச்சந்திரன், மு. கண்ணப்பன், இரா. செழியன் எம்.பி., முரசொலி மாறன் எம்.பி., முத்துசாமி எம்.பி., ஏ. வி. பி. ஆசைத்தம்பி, இராம. அரங்கண்ணல், து. ப. அழகமுத்து, டி. கே. பொன்னுவேலு எம்.எல்.சி., டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி., ஜி. பராங்குசம் எம்.எல்.சி. ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்ட முடிவுக்குப் பின்னர் செயற்குழு நிகழ்ச்சிகள்—அதன் முடிவுகளைப் பற்றி கழகத் தலைவர் கலைஞர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இரங்கல்

மாற்றுக் கட்சியினரின் கொலை வெறிக்கு ஆளாகி மறைந்த பிரதாம் சந்திரன், சிவகங்கை முத்து, ஆலந்தூர் லிங்கம் ஆகியோரின் மறைவுக்கும், அண்மையில் இயற்கையெய்திய 'இராவண காவிய'ப் புலவர் குழந்தை, புலவர் பு. செல்வராஜ் ஆகியோருக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டு — செயற்குழு உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் எழுந்து நின்று மௌனம் மேற்கொண்டனர்.

வரவு-செலவுக் கணக்குகள்

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி, இராம. அரங்கண்ணல், து. ப. அழகமுத்து ஆகியோர் தலைமைக் கழகத்தின் கணக்குகளை தணிக்கை செய்து அறிக்கை அளித்தனர்.

பொதுச்செயலாளர் நாவலர் 1-7-69 முதல் 30-6-71 முடிய தலைமைக் கழகத்தின் வரவு-செலவுக் கணக்குகளை விவரமாக செயற்குழுவுக்கும் படித்தளித்தார்.

செயற்குழு ஒருமனதாக தணிக்கைக் குழு அறிக்கையையும், தலைமைக் கழக வரவு-செலவுகளையும் ஏற்றுக்கொண்டது.

சட்ட திட்ட திருத்தம்

கழகத்தின் சட்ட திட்டங்கள் விதி 8-ல், சார்பு மன்றங்கள் குறித்துக் 'கழகச் சார்புடைய மன்றங்கள் — படிப்பகங்கள் ஆகிய துணை மன்றங்களைத் துவக்க விரும்புவோர், சம்பந்தப்பட்ட உள்ளூர்க் கிளையின் மூலமாகப் பொதுச்செயலாளரின் அனுமதி பெறுதல் வேண்டும் — சார்பு மன்றம் அமைந்த பிறகும் அதன் நிர்வாகிகள் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்துவதென்றால் சம்பந்தப்பட்ட கிளையிலிருந்து செயலாளரின் அனுமதியைப் பெற வேண்டும் — எக்காரணம் கொண்டாவது அனுமதி மறுக்கப்பட்டால் சார்பு மன்றங்கள் முறையாக மேலிடத்திற்கு முறையீடு செய்து கொள்ளவேண்டும்' என்று ஏற்கனவே உள்ள விதியின்படி சார்பு மன்றங்கள் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு இயங்கவேண்டும் என்றும், அப்படிப்பட்ட எந்த ஒரு தனிப் பெயரில இயங்கும் மன்றங்களாயினும் — படிப்பகங்களாயினும் தமக்கிடையே தொடர்பு வைத்துக்கொண்டு நகர அமைப்பு—வட்ட அமைப்பு—வட்ட அமைப்பு — தலைமை அமைப்பு என மேலமைப்புகள் அமைப்பது கழகச் சட்டத் திட்டத்தை மீறுவதாகையால், 'அவை சார்பு மன்றங்களல்ல' என அறிவிக்கப்படும்; மேலும் கழக உறுப்பினர்கள் எவரும் கழகச் சட்டத் திட்டத்துடன் முரண்பட்டு இயங்கும் எந்த மன்றத்திலும் உறுப்பினராக இருக்கக் கூடாது எனத் தி. மு. க. தலைமைச் செயற்குழு, பொதுக்குழுவுக்குப் பரிந்துரை செய்து, இதற்கேற்ப கழகச் சட்ட திட்டத்தில் விதி 8-ல் துணை விதி சேர்க்கவும் பரிந்துரைத்தது.

எம்.ஜி.ஆர். விவகாரம்

அதன் பிறகு தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், திரு. எம். ஜி. ஆர். மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை ஆதரித்துப் பேசினர்.

இராசமன்னார் குழு அறிக்கை — துணைக் குழு விளக்கம்

இராசமன்னார் குழு அறிக்கையினை ஆராய்ந்த துணைக் குழு அமைப்பாளர்களான இரா. செழியன், முரசொலி மாறன் ஆகிய இருவரும் அதுபற்றிய விவரங்களை அளித்து உரையாற்றினர்.

துணைக் குழுவின் அறிக்கை இறுதியக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

பெரியார் கையில் கழகக் குழந்தை!

சேன்னை, அக். 13—

"1948-ம் ஆண்டில் என்னுடைய முதல் மனைவி பத்மாவதி ஒரு குழந்தையைப் பெற்றுவிட்டு இறந்துவிட்டாள்; அந்தக் குழந்தைதான் முத்து; என்னுடைய மனைவி இறந்து — துக்கம் விசாரிப்பதற்காகப் பெரியார் என் இல்லம் வந்தார்; அப்போது நான் சாதாரணத் தொண்டன்; தாயை இழந்து நாற்பது நாள்கூட ஆகவில்லை — அந்தக் குழந்தையைத் தூக்கிப் பெரியார் கையில் கொடுத்தேன்; பெரியாருடைய கண்கள் கலங்கின; தூக்கி முத்தமிட்டார்; அப்போது அவருடைய கண்ணீர் குழந்தையின் உடம்பில் பட்டது — அவன் வளர்ந்திருக்கிறான்!

"அதைப் போலத்தான், 'அண்ணா' என்ற தாய் திராவிட முன்னேற்றக் கழகத்தை — இந்த இயக்கத்தைப் பெரியாரிடம் ஒப்படைத்துவிட்டு மறைந்திருக்கிறார்; எப்படி அன்று அந்தக் குழந்தையைத் தூக்கிப் பெரியாருடைய கையில் கொடுத்தேனோ—அதைபோலவே இன்றும் அவருடைய கையில்தான் முன்னேற்றக் கழகக் குழந்தை அண்ணா அவர்களால் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது!

"தமிழ்ச் சமுதாயமே — கலங்கற்க! பெரியார் இருக்கிறார் — நீங்களும் இருக்கிறீர்கள்! பெரியாரைப்போல் நல்லவர்கள் இருக்கிறார்கள்; குன்றக்குடி அடிகளாரைப் போன்ற அன்புள்ளங்கள் இருக்கின்றன; தமிழ்ச் சமுதாயத்தின் ஆதரவும் அரவணைப்பும் இருக்கிறது!"

—முதலமைச்சர் கலைஞர்

(சுந்தரவடிவேலு மணி விழாவில்)

தட்டுப்பாடின்றிச் சென்னை நகரில் தண்ணீர் கிடைக்கும்

சென்னை, அக். 13—

"இந்த மாதம் மழை பெய்திருப்பதால், புழலேரியில் தண்ணீர் மட்டம் உயர்ந்திருக்கிறது; இந்த ஆண்டு டிசம்பர் முதல் வாரம்

(4-ம் பக்கம் பார்க்க)

காமராசரின் அற்பத்தனம்

மனுநீதித் திட்டம் பற்றி தெரியாதவர் மக்களை ஏமாற்றத் திட்டமிடுகிருர்

கள்ளப் பணம் வைத்திருப்பவர்களை நன்கு கண்டறிந்திருப்பவர் கழக அரசுமீது பழிசுமத்தித் தப்பித்துக்கொள்ள முயற்சியா??

அதிகம் பேசாத காமராசர் இப்போதெல்லாம் அதிகமாகப் பேச ஆரம்பித்திருக்கிருர் -- அதாவது 'அதிகப் பிரசங்கி' ஆகியிருக்கிருர்!

பேசாது இருந்த காமராசரைப் பேச வைத்தது எது என்பது எல்லோருக்கும் தெரியும்; அந்தப் பெருமையும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத்தான் சாரும்!

திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் தொடர்ந்து இரண்டு பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்திருக்காவிட்டால், காமராசர் இப்படிப் பேசுவாரா -- அதுவும் வயதான இந்தக் காலத்தில்?

நின்றுகொண்டு பேச உடலில் வலுவிருந்த காலத்திலெல்லாம் ஒரு நிமிடம்—இரண்டு நிமிடத்தோடு பேச்சை முடித்துவிடக் கூடிய காமராசர், காலம்போன காலத்தில் -- அதுவும் நின்றுகொண்டுகூடப் பேச முடியாத நிலையில் உட்கார்ந்துகொண்டே ஒரு மணி—இரண்டு மணி நேரம் என்ற அளவுக்குப் பேசித்தீர வேண்டியிருக்கிறது; அதை நினைக்கும்போது, அவர்பால் நமக்கு உண்மையிலேயே அனுதாபம்தான் பிறக்கிறது!

ஒரு நாளுக்கும் பல கூட்டங்கள் -- யார் கூப்பிட்டாலும் -- எதைப் பற்றிப் பேசச் சொன்னாலும் பேச வேண்டியிருக்கிறது; காந்தி பிறந்த விழாவுக்கும் போகவேண்டியிருக்கிறது; காந்தியைப் போற்றிய வாயால், 'சினிமா நடிக'ருக்கும் பிறந்த நாள் வாழ்த்துக் கூறிப் பேசவேண்டியுள்ளது!

இப்படிப் பேசிப் பேசியே அவர் இப்போது சகலகலா வல்லுநராகி விட்டார்! ஆம் -- அரசியல் துறையாகட்டும் -- பொருளாதாரத் துறையாகட்டும் -- வேறு எந்தத் துறையாகட்டும் -- அதில் தன்னை மிஞ்சிய மேதை இல்லை என்கின்ற நினைப்பில் -- அவர், கருத்துக்களை அள்ளியள்ளி வழங்கி வருகிருர்!

"விலைவாசி உயர்வுக்கு மாநில அரசே காரணம்" என்று கூறுகிருர்; அடுத்தகணம், 'விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசு தான் காரணம் என்ருல், மத்திய அரசை எதிர்த்து ஏன் போராடவில்லை தி.மு.க.' என்று பேசுகிருர்!

"மாநில சுயாட்சிக்குப் போராடும் துணிவு உண்டா?" என்று கழகத்தைப் பார்த்துக் கேட்கிருர்!

"மின்சாரத்தை நாங்கள் உற்பத்திச் செய்தோம்; தி.மு.க. அரசு அதை எடுத்து மக்களுக்கு வழங்குகிறது -- அதாவது கப்பி நீட்டும் வேலையைச் செய்கிறது" என்கிருர்!

"தி.மு.க. அரசு வழங்கும் பட்டாக்கள் எல்லாம் வெறும் காகிதங்கள்தான்" என்கிருர்!

இப்படி நாளுக்கு ஒரு கருத்து -- பொழுதுக்கோர் 'அபிப்பிராயம்' சொல்லிக்கொண்டிருக்கிருர்!

எல்லாத் துறைகளிலும் மழுத்த அனுபவ மேதையாயிற்றே -- அவர் சொல்வதை அலட்சியப்படுத்திவிடலாமா? எனவே நாட்டு மக்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கத்தான் வேண்டும்.

மின்சாரத்தை -- காங்கிரசுக் கட்சி ஆண்டபோது -- உற்பத்தி செய்தார்களாம்; அதை இப்போது மக்களுக்குத் தி.மு.க. அரசு வழங்குகிறதாம்! இது அவருடைய குற்றச்சாட்டு!

காங்கிரசுக் கட்சி ஆண்டபோது உற்பத்தியான மின்சாரம் என்பதால் அதை மக்களுக்கு வழங்கக்கூடாதா? அவர்கள் உற்பத்தி செய்தது அப்படியேதான் இருக்க வேண்டும் -- காங்கிரசுக்காரர்கள் யார் யாருக்கு மின்சாரம் கொடுத்து வந்தார்களோ அவர்களுக்கு மட்டுமே தி.மு.க. ஆட்சியும் கொடுக்க வேண்டுமென்று கூறுகிருரா காமராசர்?

ஆண்டாண்டுக் காலமாக மண்ணெண்ணெய் விளக்கைத் தவிர மின்னொளியையே கண்டறியாத இருண்ட கிராமங்களெல்லாம் இன்னும் அப்படியேதான் இருக்க வேண்டும் என்கிருரோ என்னவோ?

அப்படியானல், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட பல்வேறு வசதிகளையும் -- காங்கிரசுக்காரர்கள் ஆட்சிக்கு வந்ததும் -- அப்படியே ஒதுக்கிவைத்துவிட்டுப் புதிதாகப் பல வசதிகளை உருவாக்கி மக்களுக்கு வழங்கினார்களா?

மேட்டூர் அணையை வெள்ளைக்காரன்தானே கட்டினான்? அதை விடுத்து, வேருெரு அணையக் காவிரியில் கட்டியா மின்சார உற்பத்தியைக் காங்கிரசார் செய்தார்கள்?

இருபதாண்டுக் காலம் ஆட்சியில் இருந்தும், கிராமத்து விவசாயப் பெருங்குடி மக்களின் கோரிக்கைகளையெல்லாம் புறக்கணித்துவிட்டு -- வீண் வாய்ச்சவடால் அடித்துக்கொண்டிருந்த காங்கிரசுக்காரர்கள், இப்போது கழக அரசு கிராம மக்களின் தேவைகளை அறிந்து செய்துவரும் பல்வேறு நல்ல காரியங்களையும் கண்டு வயிற்றெரிச்சல் படுகிருர்கள்! கிராம மக்களிடையே கழக அரசு பெற்றுவரும் செல்வாக்குக் கண்டு அவர்களால் பொறுக்கமுடியவில்லை!

'வெறுங் காகிதத்தைக் கொடுத்துவிட்டு, பட்டா வழங்குவதாகத் தி.மு.க. அரசு கிராம மக்களை ஏமாற்றி வருகிறது' என்கிருர் காமராசர்! இதைக் கேட்டுச் சிரிப்புத்தான் வருகிறது!

இப்பொழுது நிலப் பட்டாவைப் பார்த்து, 'அது வெறுங்காகிதம்' என்று கூறும் காமராசர், இந்திரா காந்தி அரசு அச்சடித்து வழங்கும் ரூபாய் நோட்டையும் 'வெறும் காகிதம்தான்' என்று சொல்லக்கூடும்! 'பணத்துக்குப் பதில் காகிதத்தைக் கொடுத்து ஏமாற்றப் பார்க்கிறது மத்திய அரசு -- ஏமாருதீர்கள்' என்று கிராம மக்களிடம் சென்று காமராசர் பிரசாரம் செய்தால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை!

ஆனல் ஒன்று; காமராசர் நினைப்பதைப்போலக் கிராமத்து மக்கள் அவ்வளவு விவரம் தெரியாதவர்களாக இன்று இல்லை!

பணத்துக்கும் — வெறுங் காகிதத்துக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்தவர்கள், பட்டாவுக்கும் -- வெறுங்காகிதத்துக்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்துகொள்ளமாட்டார்களா?

தி. மு. கழக அரசு வெறும் காகிதத்தைக் கொடுத்து ஏமாற்றுகிறது என்ருல், இந்த வெறுங்காகிதத்தைக்கூட இருபதாண்டுக் கால காங்கிரசு ஆட்சியில் விவசாயிகளுக்குக் கொடுக்க வக்கில்லாமல்தானே இருந்தார்கள்?

விவசாயிகள் கேட்டுக் கேட்டுப் பார்த்துச் சலித்துப்போய் -- ஓய்ந்தே போய்விட்டார்கள்; கழக அரசு வந்த பிறகுதான், மனுநீதித் திட்டம் வந்தது; விவசாயிகளைத் தேடிச் சென்று குறை கேட்டறிந்தனர் அதிகாரிகள்; வீட்டுமனை — விளைநிலப் பட்டாக்களெல்லாம் வழங்கப்படுகின்றன; நெடுங்காலக் கோரிக்கைகளெல்லாம் பட்டபடவென்று நிறைவேற்றப்படுகின்றன!

காமராசர் இன்னொரு புதிய செய்தியையும் வெளியிட்டிருக்கிருர்; 'கள்ளப்பணம் எங்கே இருக்கிறது என்பது அரசாங்கத்துக்குத் தெரியும்; கள்ளப்பணம் வைத்திருப்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம், ஆளுங்கட்சியின் நிதி வசூல் பாதிக்கும் என்பதால்தான்' என்று கோவையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் சொல்லியிருக்கிருர்!

இதிலிருந்து தெரியவரும் உண்மை என்னவென்ருல், கள்ளப் பணம் யார் யாரிடம் இருக்கிறது என்பது காமராசருக்கும் தெரியும் — தெரிந்திருந்தும், ஆட்சியில் அவர் இருந்தபோது நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான்!

ஆளுங்கட்சி நிதி வசூலைப் பாதிக்கும் என்பதற்காகத்தான் கள்ளப்பணக்காரர்கள்மீது காமராசர் ஆண்டகாலத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை போலும்!

கள்ளப் பணம் யார் யாரிடம் இருக்கிறது என்பது ஆட்சியாளர்களுக்கும் தெரியும் என்கிருர்; அப்படியானல் ஆட்சியிலிருந்த காமராசருக்கும் அது தெரியாமல் இருந்திருக்க நியாயமில்லை!

இன்றைய ஆட்சி சொந்தக் கட்சி நலனை முன்னிட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்கிக்கொண்டிருக்கிறது என்பதை வாதத்துக்காக ஒப்புக்கொள்வோம்; காமராசராவது பட்டியல் போட்டுக் காட்டலாம் அல்லவா -- யார் யாரிடம் கள்ளப் பணம் இருக்கிறது என்பதை?

காமராசரின் கூற்றில் சிறிதேனும் உண்மை இருக்குமானல் -- நாட்டு நலனில் அவருக்கு உண்மையான அக்கறை இருக்குமானல், கள்ளப் பணக்காரர்களின் பட்டியலை வெளிப்படுத்துவாரா?

கள்ளப் பணத்தைத் தங்கப் பாளங்களாக மாற்றி அடுக்கிவைத்துக்கொண்டிருப்பவர்களெல்லாம் காமராசரின் நெருங்கிய நண்பர்களாகவும், அவருடைய அத்தியந்த சீடர்களாகவும்தான் இருக்கிருர்கள் என்று நாட்டில் பேசிக்கொள்கிருர்கள்!

இன்னும் சொல்லப்போனல், காமராசரிடமே கள்ளப் பணம் இருப்பதாகக்கூடக் காலஞ்சென்ற முத்துராமலிங்க தேவர் பகிரங்கமாகவே சொன்னர். இப்படிப்பட்ட கூற்றுக்களையெல்லாம் வைத்துக்கொண்டு அப்போது எதிர்க் கட்சியாக இருந்த தி. மு. கழகம் பிரசாரம் செய்துகொண்டிருக்கவில்லை!

சரியாகவோ -- தவருகவோ, ஓர் 'அகில இந்தியப் பெருந்தலைவர்' என்று பெயரெடுத்துவிட்ட காமராசர், உண்மையான குற்றங் குறைகளை எடுத்துச் சொல்லி -- உருப்படியான யோசனைகளைக் கூறுவதுதான் நாட்டுக்கும் நல்லது -- அவருக்கும் நல்லது; அதைவிடுத்து, அற்பத்தனமான பிரசாரங்களில் ஈடுபடுவது 'அதிகப்பிரசங்கித்தன'மாகத்தான் கருதப்படும்!

குருட் எண்ணெய் உற்பத்தி

சென்னை, அக். 12—

குருட் எண்ணெய் உற்பத்தியை 1978-ம் ஆண்டுக்குள் -- ஆண்டுக்கு 80 இலட்சம் டன்னுக அதிகரிப்பதற்கான ஒரு திட்டத்தை எண்ணெய் இயற்கை எரிவாயுக் குழு தயாரித்திருக்கிறது; இந்தத் திட்டத்துக்கு ரூ. 600 கோடி செலவாகும்.

தொழில் நுட்பப் பொருளாதாரச் சாத்தியக்கூறு பற்றி சோவியத் நிபுணர்கள் -- இயற்கை எரிவாயுக் குழுவைச் சேர்ந்த நிபுணர்களும் உள்ளிட்ட ஒரு குழு ஆய்வு நடத்தியது; இதனை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலைகள் திருட்டு போவதில்லை; ஆனல் கிராமங்களில் உள்ள கோவில்களின் சிலைகள்தான் பெரும்பாலும் திருட்டு போகின்றன; இதை தடுக்க, ஓரளவு நல்ல நிலைமையில் உள்ள கோவில்களில் சிலைகளைப் பாதுகாப்பாக வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியாவிலிருந்து வெளிநாட்டுக்குக் கடத்தப்பட்ட சிலைகளை மீண்டும் இந்தியாவுக்குக் கொண்டுவர தீவிர நடவடிக்கை எடுத்து வருகிருேம்; இதுபற்றிச் சர்வதேசப் போலீசு அதிகாரிகள் மகாநாடு எடுத்துள்ள முடிவின்படி, எந்தெந்த நாட்டிலிருந்து சிலைகள் கடத்திக் கொண்டு வரப்பட்டனவோ அந்தந்தச் சிலைகளைக் கண்டுபிடித்து அவர்களிடமே ஒப்படைப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது."

---

12 ஆண்டுகளில் உணவு உற்பத்தி 112 இலட்சம் டன் ஆகும்

வேளாண்மை வளர்ச்சிக்கு ரூ. 900 கோடி முதலீடு

தமிழகத் திட்டக் குழுவின் அறிக்கை-- முதல்வர் கலைஞரிடம் அளிக்கப்பட்டது

சென்னை, அக். 12—

1972-84-ல் உணவுத் தானிய உற்பத்தியை 111 50 இலட்சம் டன்களாக உயர்த்துவதற்கான 12 ஆண்டு விவசாய வளர்ச்சித் திட்டத்தை தமிழ்நாடு திட்டக் குழு உறுப்பினர் டாக்டர் பி. நடராசன், திட்டக் குழுத் தலைவர் முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் அளித்தார்.

1970-71-ல் உணவுத் தானிய உற்பத்தி 70 30 இலட்சம் டன்; 1983-84 ல் இது 111 50 இலட்சம் டன் ஆகும்; 12 ஆண்டுத் திட்டத்துக்கு முதலீடு ரூ 900 கோடி (பாசனம் ரூ 360 கோடி.-- விவசாயம் ரூ. 540 கோடி).

வளரும் மக்கள் தொகைக்கு உடல் வலுவளிக்கும் உணவுத் தானியங்கள் கிடைக்கும் வகையில் போதுமான அளவுக்கு உபரித் தானியங்கள் எழுப்புவது திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டம் பற்றித் திட்டக் குழுத் துணைத் தலைவர் எம். ஜி இராசாராம், செய்தியாளர்களிடம் கூறியதாவது:—

"அரிசி உற்பத்தி 53 03 இலட்சம் டன்களிலிருந்து 76.50 இலட்சம் டன்களுக்கு உயரும். பல போக சாகுபடி — தீவிர உற்பத்திப் பெருக்குத் திட்டங்கள் மூலம் உணவுத் தானிய உற்பத்தியை அதிகரிப்பது நோக்கமாகும்; நில அளவை விரிவுபடுத்துவதற்குப் புதிய முறைகள் கையாளப்படும்.

எண்ணெய் வித்துக்கள் இப்போது 10 இலட்சம் டன்; 1978-79-ல் 16 85 இலட்சம் டன்; 1983-84-ல் 23.03 இலட்சம் டன்.

சூரியகாந்தி வித்துக்கள் ஐந்தாவது திட்டத்தில் 1.50 இலட்சம் ஹெக்டேர்கள்; 6 வது திட்டத்தில் 3-இலட்சம் ஹெக்டேர்கள்.

1983-84-ல் பருத்தி உற்பத்தி 11.88 பேல்; இதில் கால் பங்கு எண்ணெய் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும்.

சர்க்கரை (1983-84) உற்பத்தி 9.25 இலட்சம் டன்; 12 புதிய சர்க்கரை ஆலைகள்தோன்றும்.

நடுத்தர — சிறு பாசனத் திட்டங்கள் சீரமைக்கப்படும்.

கால்வாய்களில் நீர் சேதாரத்தைத் தடுக்கக் கரைகளுக்கு சிமெண்டுப் பாதுகாப்பு போடப்படும்.

ஏரிகளின் நீர் பிடிப்பு திறமையாக அமைக்கப்படும்.

ஊற்றுக்கால் நீர் பயன்படுத்தப்படும்.

12.70 இலட்சம் ஹெக்டேர்களுக்குப் பாசன வசதிகள் இதன்மூலம் விரிவுபடுத்தப்படும்."

கோவில் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு

அமைச்சர் கண்ணப்பன் தரும் தகவல்

திருச்சி, அக். 11—

"கோவில்களில் பணியாற்றும் ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் கருத்துத் தெரிவித்திருக்கிருர்; ஆகவே, அந்தந்தக் கோவில்களின் வருமான அடிப்படையில் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க ஏற்பாடுகள் செய்து வருகிருேம்"

என்று அறநிலையத் துறை அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; மேலும் அவர் பல்வேறு பிரச்சினைகள் மீதும் தெரிவித்த தகவல்களாவன:—

இன்னும் பதில் வரவில்லை

'தஞ்சையில் உள்ள இராஜராஜ சோழன் சிலையைக் கோவிலுக்குள் வைப்பது மற்றும் -- கோவிலைப் பராமரிக்கும் பொறுப்பைத் தமிழக அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டு மத்திய அரசுக்கு மீண்டும் கடிதம் எழுதியிருக்கிருேம்; ஆனல் இதுவரையில் எந்தப் பதிலும் வரவில்லை.

கோவில்களில் நூல் நிலையம்

இப்போது தமிழ்நாட்டில் 300 கோவில்களில் நூல் நிலையங்கள் இருக்கின்றன; எல்லாக் கோவில்களிலும் நூல் நிலையங்கள் அமைக்க வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்தி வருகிருேம்.

திருச்சியில் இழுவை இரயில்

திருச்சியில் உள்ள மலைக் கோட்டை கோவிலுக்கு இழுவை இரயில் விடுவதற்கு அனுமதி வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது.

இழுவை இரயில் விடுவதால் கோவிலுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்ற அடிப்படையில் ஆலோசித்து இழுவை இரயில்விட அனுமதி வழங்கப்படும்."

சிலைகள் களவு

தடுக்கத் தீவிர நடவடிக்கை

சிலைகள் களவு போவதைத் தடுக்கும் திட்டம் பற்றி அமைச்சர் கூறியதாவது:—

"சில திருட்டைத் தடுக்கத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது; பொதுவாகத் தமிழ்நாட்டில் உள்ள பெரிய கோவில்

(1-ம் பக்தி பார்க்க)

புதிய சமுதாயத்தை உருவாக்குவோம்

எல்லாத்துறையிலும் புகார்களை வரவேற்க வேண்டும்

திரைப் படத் துறைப் பயிற்சிக் கல்லூரியில் முதலமைச்சர் கலைஞர் ஆய்வுரை

சென்னை, அக். 13—

"தமிழ்நாட்டுக் கலைத் துறையில் நிறைய புதியவர்கள் வரவேண்டும்; நடிகர்கள் மட்டுமல்ல--ஒளிப்பதிவு, இயக்குநர், 'எடிட்டிங்' ஆகிய பல்வேறு துறைகளிலும் புதியவர்கள் வந்துகொண்டே இருக்க வேண்டும்; அதற்குப் பழையவர்கள் வழிவிட வேண்டும்.

'தென்னை மரத்தில் இருக்கின்ற பழுப்பு மட்டைகள் ஒவ்வொன்ருக விழும்; புதிய மட்டைகளும் இருக்கும் -- பழைய மட்டைகளும் இருக்கும்; பழுப்பு மட்டைகள் பச்சை மட்டைகளுக்குக் காவலாகவும், பாதுகாப்பாகவும் இருக்கும்; பிறகு விழுந்துவிடும்; பச்சை மட்டையும் பிறகு பழுப்பு மட்டையாகும் -- விழுந்துவிடும்.

'அப்படி விழுகின்ற பழுப்பு மட்டைகள் விழுந்த இடத்தில் வடுக்கள் தோன்றுகின்றன; அந்த வடுக்கள் தேங்காய் பறிக்கவோ -- இளநீர் பறிக்கவோ மேலே ஏறுகின்றவர்களுக்குப் படிக்கட்டுகளாகப் பயன்படுகின்றன, தான் இருந்த இடத்தைச் சுவடுகளாக விட்டுவிட்டுப் பழுப்பு மட்டைகள் மற்றவர்களுக்குப் பயன்படுகின்றன!

"தான் மறைந்த பிறகும் மற்றவர்களுக்குப் பயன்படுவதில் மனிதர்களுக்கு அந்த மரம்கூட எடுத்துக்காட்டாக இருக்கிறது; அப்படிப்பட்ட நிலைமையில், சமுதாயத்தில் புதியவர்களை வரவேற்கப் பழையவர்கள் முன்வர வேண்டும்; இருவருமாகச் சேர்ந்து, 'புதிய சமுதாயத்தை உருவாக்கப் பாடுபடுவோம்' என்ற உறுதி மொழியை எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அடையாறு திரைப் படத் தொழில் நுட்பக் கல்வி நிலையத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

இந்தக் கல்லூரியின் தமிழ் மன்றத்தை முதலமைச்சர் கலைஞர் துவக்கிவைத்து உரை நிகழ்த்தினர்.

மாணவர் மன்றத்தின் சார்பில் இராசேந்திரனும் -- தமிழ் மன்றத்தின் சார்பில் அப்துல் ரசாக்கும் -- நுண்கலை மன்றத்தின் சார்பில் வெங்கடாசலபதியும் முதலமைச்சரை வரவேற்றுப் பேசினர்.

தமிழ் மன்றத்தின் சார்பில் முதலமைச்சருக்கு வரவேற்பு இதழ் படித்தளிக்கப்பட்டது.

விழாவில் அமைச்சர்கள் எஸ். ஜே சாதிக் பாட்சா, அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலைஞர் அவர்கள் மன்றத்தைத் தொடங்கிவைத்துப் பேசியதாவது:—

"வரவேற்புரை ஆற்றிய மாணவ நண்பர்கள் இங்கே துவக்கப்பட இருக்கின்ற நான்கு மன்றங்களையும் துவக்கி வைக்கின்ற தகுதி எனக்கு இருப்பதாகத் தெரிவித்தார்கள்; இந்த மன்றங்கள், பிரச்சினைக்குரிய மன்றங்களாக இருக்காது என்கின்ற நம்பிக்கையுடன் இவற்றைத் திறந்துவைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

திரைப்படத் துறையில் பல புதிய உத்திகள் கையாளப்பட வேண்டும் என்ற எண்ணம் ஏற்கனவே கலைத் துறையில் ஈடுபாடு கொண்ட எனக்கு அரசுப் பொறுப்பை ஏற்றபோது ஏற்பட்டது.

எனக்கு அரசியலில் சங்கடமும் -- அரசாங்க வேலைகளில் சங்கடங்களும் ஏற்படும்போது, 'ஒழுங்காக இருந்த இடத்திலேயே இருந்திருக்கலாமே' என்று தோன்றுவதுண்டு.

எவ்வளவு சங்கடங்கள் ஏற்பட்டாலும், கலையுலகில் ஈடுபட்டவர்கள் அவற்றைத் தாங்கிக் கொள்ளும் இதயத்தைப் பெற்றுவிடுகிருர்கள்; அப்படிப்பட்ட பழக்கம் வந்துவிடுகிறது.

இந்த நிறுவனம், ஏதோ பொழுது போக்குவது -- திறமைகளை வளர்ப்பது -- ஒரு சிலரின் வாழ்க்கையை வளப்படுத்துவது என்றில்லாமல், சமுதாயத்தை மாற்றியமைத்திடும் அளவுக்கு ஒரு பெரும் இயக்கமாக இருக்க வேண்டும் என்று தணியாத ஆசை எனக்கு உண்டு.

இந்த நிறுவனத்தில் பயிற்சி பெறுகின்ற பல்வேறு துறை மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையத் தினம் இங்கே தமிழ் மன்றமும் -- நுண்கலை மன்றமும் -- விளையாட்டு மன்றமும் -- மாணவர் மன்றமும் தொடங்கப்படுகின்றன.

உங்களுக்குச் சில குறைபாடுகள் உண்டு என்பதை நான் அறியாதவனல்ல; தோழர் இராசேந்திரன் பேசும்போது, இதுபோன்ற நடிப்புப் பயிற்சி நிறுவனம் வேறென்றும் ஏற்படப் போவதாகச் சொன்னர்; நான் தலையிட்டால் அதை நிறுத்திவிடக்கூட முடியும்; ஆனல் அப்படிப்பட்ட போட்டி இருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசையாகும்.

இன்னென்றும் உருவானல்தான் அங்கிருந்து வெளிக் கிளம்பும் மாணவர்கள் திறமையானவர்களா என்பதைப் பற்றிய நல்ல விளைவுகளை நாட்டுக்கு அறிவிக்க முடியும்; ஆகவே, அப்படிப்பட்ட போட்டி தேவை; அதனல், இங்கே வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துவிடுமோ என்று கருதத் தேவையில்லை; இப்போது நான் இந்த நிறுவனத்தின் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு வருகிறேன்.

இப்போது நடிப்புத் துறையில் ஐந்து மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர்; அடுத்த ஆண்டு 10 மாணவர்களாக அதிகப்படுத்தப்படும் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

நடிகர்கள் மட்டுமன்றி நடிகைகளாகப் பயிற்சிப் பெறுவதற்கும் 5 பேருக்கு வாய்ப்பு ஏற்படுத்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது; இடையில் நீங்கள் எந்த விதப் போராட்டமும் நடத்தாமலேயே இவைகள் நிறைவேற்றப்படும்.

அதுமட்டுமல்ல -- மாணவர்கள் அவர்களாகவே படம் எடுத்து வெளியிடுவதற்காக இதுவரை ரூ. 38,000 ஒதுக்கப்பட்டது; இது போதாது என்று அறிந்து, இனிமேல் ரூ 75,000 ஒதுக்கீடு செய்வது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

'பணம் உயர்த்தப்படுகிறது' என்றதும் கைபொலி செய்த நீங்கள், 'புதிதாக மாணவர்கள் சேர்க்கப்படுகிருர்கள் என்று அறிவித்தபோது உற்சாகம் காட்டவில்லை; ஒருவேளை, புதியவர்கள் வந்தாலே அவர்களை வரவேற்பதில் சங்கடப்படுகிறீர்களோ என்று கருதுகிறேன்.

நுண்கலை மன்றமானலும் -- தமிழ் மன்றமானலும் — விளையாட்டு மன்றமானலும் -- மாணவர் மன்றமானலும்--எல்லா மன்றங்களும் கட்டமை உணர்ச்சியையும் பண்பாட்டு உணர்ச்சியையும் கடைபிடிக்க வேண்டும்.

நாகரிக மனிதர்களாக -- தேவைகளை நாகரிகத்தோடு எடுத்துச் சொல்பவர்களாக — பேச்சு வார்த்தைகள் மூலம் எதையும் தீர்த்துக்கொள்ள முடியும் என்ற முறையில் செயல்பட வேண்டும்.

இராசேந்திரன் என்னை வரவேற்றும் பேசிக்கொண்டிருந்தபோது அவர் நடிப்புப் பயிற்சி பெறுகிறவர் என்றுதான் கருதினேன்; பக்கத்திலிருந்த செய்தித் துறை இயக்குநர் நாகராசன், அவர் துவக்கத்தில் நடிக்க வந்ததாகவும் -- இப்போது எடிட்டிங் பயிற்சி பெறுவதாகவும் கூறினர்; இப்படி எல்லாத் துறைகளிலும் புகழ் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

அப்படிப் பல துறைகளில் புகழ் பெற்ற இயக்குநர் பஞ்சு -- புகைப்பட நிபுணர் மாருதிராவ் -- படத் தயாரிப்பாளர் பீம்சிங் மற்றும் கிருஷ்ணசாமி போன்றவர்கள் இங்கே இருக்கிருர்கள்.

இப்படி ஒவ்வொருவர் என்றிருந்தால் போதாது; பல பேர் தோன்றினல்தான் சமுதாயத்தின் சேவைகளை நிறைவு செய்ய முடியும் கலைத் துறையில் பணியாற்ற முடியும்.

படத்துறையின் மூலமும் -- டெலிவிஷன் மூலமும் நாட்டுக்கு நல்ல பொருட்களை எடுத்துச் சொல்ல வேண்டும்.

சமுதாயத்தின் அங்கங்கள் தனித் தனியாகப் பிரிந்து பல்வேறு பல்வேறு பணிகளில் ஈடுபட வேண்டும்.

எல்லோருமே குடிசைகளை மாற்றும் பணியிலோ, குஷ்டரோகிகளுக்கு நிவாரணமளிக்கும் பணியிலோ, மருத்துவத் துறை -- பொறியியல் துறை -- உழவுத் தொழில் -- தொழில் துறை போன்றவற்றிலோ ஈடுபட்டிருக்க முடியாது.

ஒவ்வொரு துறையிலும் நல்ல எழுத்தாளர் -- நல்ல இயக்குநர் -- நல்ல நடிகர் என்று எல்லாத் துறைகளிலும் இருக்க வேண்டும் என்றுதான் விளையாட்டு மன்றமும் இதில் இருக்கிறது: எல்லாம் விளையாட்டாக இருக்கக் கூடாது என்றுதான் தமிழ்ப் பண்பாட்டுடன் நடக்க வேண்டுமென்று தமிழ்ச் சங்கமும் துவக்கப்பட்டிருக்கிறது.

இந்த நான்கு மன்றங்களும் ஒன்றுபட்டு -- ஒரே உணர்ச்சியைப் பிரதிபலித்துக் கடமையாற்ற வேண்டும்.

தமிழ்ச் சமுதாயத்தையும் -- இந்திய சமுதாயத்தையும் ஒளி மிகுந்ததாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

நாடு தழுவிய வறட்சிக்குக் காரணம்

மத்திய அமைச்சர் கே. எல். ராவ் கவலை

கடந்த ஆண்டுகளில் செய்யத் தவறியதை சுட்டிக்காட்டுகிருர்

பம்பாய், அக். 12—

இந்தியா ஒரு நாடாக நிலைத்து நீடிக்க வேண்டுமென்ருல், 5-வது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள் இந்தியாவின் மின்சார உற்பத்தி இரு மடங்காகப் பெருகவேண்டும்; அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் இந்தியாவின் பாசன வசதிகள் இருமடங்காக அதிகரிக்க வேண்டும்"

என்று மத்திய விசை -- பாசனத் துறை அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ், பம்பாயில் இந்திய பத்திரிகையாளர் சங்கத்தில் பேசுகையில் கூறினர்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

'நீர்வளத்தையும் -- மின்சார வளத்தையும் பெருக்குவதற்குத் தொடக்க ஆண்டுகளில் உரிய அளவில் முன்னுரிமை அளிக்கப்பட்டிருந்தால், இப்போது ஏற்பட்டிருப்பதைப் போன்ற நாடு தழுவிய வறட்சி நிலையின் விளைவாக பெருந் துயரம் ஏற்பட்டிருக்காது.

மக்கள் உயிர் வாழ்வதற்கும் -- உணவுத் தானியங்களைப் பயிர் செய்வதற்கும் -- விரிவான அளவில் வேலைவாய்ப்புகளை அளிப்பதற்கும் நீர் வளம் மிக முக்கியமானதாகும்; நீர் வளத்தைப் பெருக்க முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

இந்திய நதிகளில் போதுமான அளவு நீர் உள்ளது; ஆனல் நதிகள் ஓடுகின்ற போக்கு மக்களுக்கு சாதகமானதாக இல்லை; எனவே, கணிசமான அளவு நீர் வீணுகிவிடுகிறது; நதிகளில் உள்ள நீரை முழு அளவில் பயன்படுத்த இயலுவதில்லை; எனவே, தேசிய நீர் 'கிரிட்' ஒன்றை அமைக்கவும்-- நதிகளிடையே முறையான தொடர்புகளை ஏற்படுத்தவும் முன்னுரிமை தந்து செயல்பட வேண்டும்; இதனைச் சாதிக்க நாட்டில் வள ஆதாரங்களும் திறன்களும் உள்ளன; இதற்குத் தேசிய அடிப்படையில் முன்னுரிமை தரப்பட வேண்டும்.

நீரைவிட உரங்களுக்கு அதிக முன்னுரிமை தருவதன் மூலம் நாம் சரியான செயலைச் செய்யவில்லை."

சிறு விவசாயிகள் 630 பேருக்குப் பயிற்சி

தெ. ஆ. மாவட்டத்தில் ஓராண்டுப் பணி

சென்னை, அக். 12—

சென்ற ஆண்டு தென்னுற்காடு மாவட்டத்தில் நிறுவப்பட்டத்தில் சிறு விவசாயிகள் வளர்ச்சி நிறுவனம், இதுவரையில் பல்வேறு கிராமங்களையும் சேர்ந்த 630 சிறு விவசாயிகளுக்கும் பயிற்சி அளித்திருக்கிறது.

மேம்பாடு செய்யப்பட்ட தீவிர விவசாய வழிகளைப் பின்பற்றும் முறைகளைக் குறித்து இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த நிறுவனம் மாவட்டத்தின் எல்லா வட்டங்களிலும் பயிற்சி வகுப்புகளை நடத்தி, பல்வேறு விவசாய வழிகளிலும் 300 சிறு விவசாயிகளுக்கும் பயிற்சி தந்திருக்கிறது.

828 சிறு விவசாயிகளுக்குத் தென்னங்கன்றுகளும், 506 சிறு விவசாயிகளுக்குக் காய்கறி நாற்றுகளும் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

நடப்பு ஆண்டிலேயே 1,200 சிறு விவசாயிகளுக்குக் கையால் இயக்கக்கூடிய தெளிப்புச் சாதனங்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நான்கு ஊராட்சி மன்றங்கள் டிராக்டர்கள் வாங்குவதற்கும் இந்த நிறுவனம் உதவியுள்ளது; இந்த டிராக்டர்கள் சிறு விவசாயிகளுக்குச் சலுகை முறையில் குறைந்த கட்டணத்திற்கு வாடகைக்கு விடப்படும்.

சிறு விவசாயிகளின் பல்வேறு பிரச்சினைகளையும் விவாதிக்கும் அளவில் மாவட்டத்தில் இதுவரை ஏழு கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன; இக் கருத்தரங்குகளில் சுமார் 1,500 சிறு விவசாயிகள் கலந்து கொண்டனர்.

வேலூர் வட்டத்தில் நாவலர்

பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பு

கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 8—10—72-ம் நாளன்று வேலூரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்; விவரம் வருமாறு:—

ஊசலஞ்சாத்து ஊராட்சி சார்பில் ரூ. 44,000 செலவில் கட்டப்பட்ட மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டியினைத் திறந்துவைத்தார்.

நெல்வாய் ஊராட்சி மன்றத்தின் சார்பில் ரூ. 11,000 செலவில் கட்டப்பட்ட துவக்கப் பள்ளிக் கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

கனியம்பாடி ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பைப் பெற்றுக்கொண்டார்; நிகழ்ச்சிகளுக்கு எஸ். ஆர். முனுசாமி தலைமைவகித்தார்.

பின்னர், ரூ. 2 இலட்சம் செலவில் கட்டப்பட்ட முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரிக் கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

இவ்விழாவிற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தோப்பூர் திருவேங்கடம் எம்.எல்.ஏ. தலைமைவகித்தார்.

அசாம் மொழிக் கலவரம் வலுக்கிறது

கொலை--கொள்ளை--தீவைப்பு: ஆயிரம் பேர் கைது

ஷில்லாங், அக். 13—

அசாம் மாநிலத்தில் மொழிக் கலவரங்களின் விளைவாக நிலைமை மேலும் மோசமடைந்தது; கௌஹாத்தி--திப்ருகார் ஆகிய இரு முக்கிய நகரங்களிலும் கலவரங்கள் பரவின; இந்த இரு நகரங்களிலும் பல்கலைக் கழகங்கள் உள்ளன.

ஏற்கனவே கலவரங்கள் நடந்து வரும் நவ்காங் மாவட்டத்தில் கலவரம் மேலும் மோசமடைந்தது; அந்த மாவட்டத்தின் கிராமப் பகுதிகளில் கொள்ளை--தீவைப்பு--தாக்குதல் சம்பவங்கள் பெரும் அளவில் நேற்று நடைபெற்றன.

நவ்காங் நகருக்கு 20 கிலோமீட்டர் தொலைவில் ஒரு கிராமத்தில் ஒரு வீடு கொளுத்தப்பட்டது; அந்த வீட்டில் இருந்த ஒரு முதியவர் உயிருடன் கொளுத்தப்பட்டார்; இவருடன் சேர்த்து கலவரங்களின் விளைவாக 4-பேர் இறந்திருக்கின்றனர்.

அசாம் முழுவதும் நேற்று விமானங்களின் போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டது; பல பகுதிகளில் பஸ்களும் நிறுத்தப்பட்டன. பிரம்மபுத்ரா வெள்ளத் தாக்குப் பகுதியில் உள்ள நகரங்களுக்கும்--ஷில்லாங் நகருக்கும் இடையே பஸ்கள் நிறுத்தப்பட்டன; கௌஹாத்தி நகருக்குச் செல்லும் பஸ்களும் நிறுத்தப்பட்டன.

வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து, வியாழக்கிழமை காலையிலிருந்து 24 மணி நேர ஊரடங்கு உத்தரவு நடைமுறைப் படுத்தப்பட்டது.

பாதிக்கப்பட்ட பகுதிகள் அனைத்திலும் இராணுவத்தினரும்--போலீசாரும் தீவிரமாக ரோந்து சுற்றுகின்றனர்.

1,000 பேர் கைது

தற்போதைய கலவரங்கள் சம்பந்தமாக அசாம் மாநிலம் முழுவதும் சுமார் ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

அர்ச்சகரை

அடையாளம் காட்டியது துப்பறியும் நாய்

திருப்பெரும்புதூர் கோவில் திருட்டு--தீவிர புலன் விசாரணை

சென்னை, அக். 13—

செங்கற்பட்டு மாவட்டம் திருப்பெரும்புதூர் ஆதிகேசவ பெருமாள் கோவிலில், இராமானுஜர் சிலையில் அணிவிக்கப்பட்டிருந்த நகைகள் திருடப்பட்டு விட்டன; ஏறத்தாழ பதினைந்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள நகைகள் கொள்ளை போய்விட்டன.

சிலையில் ரூ. 1 இலட்சம் பெறுமான பெரிய நகைகள் அப்படியே இருக்கின்றன--திருடப்படவில்லை.

பட்டப்பகலில், கோவில் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்து இந்த கொள்ளை நடைபெற்றிருக்கிறது; இது பற்றித் துப்புத் துலக்க சென்னையிலிருந்து துப்பறியும் நாய் புருட்டஸ் வரவழைக்கப்பட்டது.

அந்த நாய் மோப்பம் பிடித்து, கோவில் மணியக்காரர் ரங்கசாமி--அர்ச்சகர் சின்னசந்தானம் ஆகியோரை அடையாளம் காட்டியது; அவர்களிடம் போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

இதற்கிடையில், 'திருடர்களை பிடிப்பதற்கான துப்பு கொடுப்பவருக்கு ரூ. 1,000 பரிசு கொடுக்கப்படும்' என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்

சுந்தரவடிவேலு மணி விழா

தந்தை பெரியார் தலைமையில் பாராட்டு--முதல்வர் கலைஞர் பொன்னாடை போர்த்தினர்

கல்வியமைச்சர் நாவலர் மற்றும் அமைச்சர்கள் பங்கேற்பு

சென்னை, அக். 13—

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்களின் மணி விழா, எழும்பூரிலுள்ள பெரியார் திடலில் நடைபெற்றது.

விழாவுக்கு, தந்தை பெரியார் தலைமை தாங்கினர்.

'விடுதலை' ஆசிரியர் கி. வீரமணி வரவேற்புரையாற்றினர்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விழாவில் கலந்துகொண்டு சுந்தரவடிவேலுவுக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டு வழங்கினர்.

அமைச்சர்கள் நாவலர் இரா. நெடுஞ்செழியன், அன்பில் தர்மலிங்கம், க. இராசாராம் மற்றும் குன்றக்குடி அடிகளார் எம்.எல்.சி., மேலவைத் துணைத் தலைவர் ம. பொ. சிவஞானம், பள்ளிக் கல்வி இயக்குநர் சை. வே. சிட்டிபாபு, என். மகாலிங்கம், சி. டி. நடராசன், ஷெரிப் எம்.ஏ., எம். இராமசாமி, இராஜா சர் முத்தையா செட்டியார், கல்வித்துறை செயலாளர் கா. திரவியம் ஆகியோரும் பாராட்டிப் பேசினர்.

திராவிடர் கழகத்தின் சார்பில் வெள்ளியால் யானை ஒன்று பரிசாக அளிக்கப்பட்டது; அதனைக் கல்வியமைச்சர் நாவலர் அவர்கள், சுந்தரவடிவேலுவிடம் வழங்கினர்.

திராவிட மாணவர் கழகத்தின் சார்பில், திரு. சுந்தரவடிவேலுவுக்குப் பாராட்டு இதழ் வாசித்து அளிக்கப்பட்டது.

பேராசிரியர் சி. பொன்னையன் நன்றி கூறினர்.

விழா தொடக்கத்தில் நாதசுர இசை வழங்கிய குளிக்கரைப் பிச்சையப்பாவுக்கு பெரியார் பொன்னாடை போர்த்தினர்.

தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்து திரு. நெ. து. சுந்தரவடிவேலு பேசினர்.

காந்தம்மாள் அறக்கட்டளை அமைக்கப்பட்டு--அதற்கு மணி விழாக் குழுவினர் மூலம் ரூ 3,500 வழங்கப்பட்டது.

மலிவு விலையில்

நடுத்தர-மோட்டாரகத் துணிகள்

நபருக்கு 10 மீட்டர் வீதம் விற்கப்படும்

நவம்பர் முதல் விலைக் குறைப்பு--சில்லறை விலையிலும் விற்பனை

புதுடில்லி, அக். 13—

நவம்பர் மாதம் 1-ந் தேதியிலிருந்து மோட்டா ரக--நடுத்தர ரகத் துணிகளைத் தனிப்பட்டவர்கள் நடத்தும் சில்லறைக் கடைகள் மூலம் விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

ஆலைகளுக்குச் சொந்தமான சில்லறைக் கடைகள்--சூப்பர் மார்க்கெட்டுகள்--மாநில அரசாங்கங்களின் நியாய விலைக் கடைகள்--தேசியக் கூட்டுறவு நுகர்வோர் சங்க நியாய விலைக் கடைகள் ஆகியவற்றின் மூலமாக மட்டுமே நவம்பர் 1-ந் தேதியிலிருந்து மலிவு ரகத் துணிகள் விற்பனை செய்யப்படும்.

இலாப நோக்குடன் துணிகளை வாங்கி அச்சுப்போட்டு--சாயம் போட்டு விற்பது போன்ற காரியங்களுக்குத் துணிகள் போய்விடாமல தடுப்பதற்காக துணிகளின் மொத்த விற்பனை நிறுத்தப்படும்.

"நவம்பர் 1-ந் தேதியிலிருந்து மோட்டா ரக--நடுத்தர ரகத் துணிகளின் விலைகளில் 8.5 சதவிகிதம் குறைக்கப்படும்" என்று அரசாங்கம் அறிவித்தது.

"இப்போது ஆலை வாயில் விலையுடன் 20 சதவிகிதம் கூட்டி துணியின் விலை நிர்ணயிக்கப்படுகிறது; நவம்பர் 1-ந் தேதியிலிருந்து ஆலை வாயில் விலையுடன் 12.5 சதவிகிதம் கூட்டி துணியின் விலை நிர்ணயிக்கப்படும்" என்று வெளி வர்த்தக அமைச்சர் எல். என். மிஸ்ரா அறிவித்தார்.

வாங்கும் வரம்பு நிர்ணயம்

மோட்டா ரக--நடுத்தர ரகத் துணிகளைத் தனிப்பட்டவர்கள் வாங்கும் அளவுக்கு வரம்பு நிர்ணயிக்கப்படும்.

ஒரு நபர் ஒரு தடவையில் ஓர் இணை அல்லது இரண்டு சேலைகள் அல்லது 10 மீட்டர் துணி வாங்க அனுமதிக்கப்படுவர்.

மாநில அரசுகளுக்குக் கட்டுப்பாட்டுத் துணி--மக்கள் தொகை அடிப்படையில் நபருக்கு இவ்வளவு என்ற விகிதத்தில் கணக்கிடப்பட்டு ஒதுக்கப்படும்.

திருடர்கள் கை துண்டிக்கப்படும்

பெய்ரூட், அக். 13—

லிபியாவில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்மீது திருட்டுக் குற்றங்கள் மெய்ப்பிக்கப்பட்டால், அவர்களுக்கு இஸ்லாம் மதச் சட்டப்படி இனி கடும் தண்டனை விதிக்கப்படும்.

திருட்டுக் குற்றத்துக்கு வலது கையை வெட்டவேண்டுமென்றும், வழிப்பறி அல்லது கொள்ளைக்கு வலது கையையும்--இடது காலையும் வெட்டிவிடவேண்டுமென்றும் இஸ்லாம் மதச் சட்டம் கூறுகிறது.

திருட்டுக் குற்றத்திற்காகக் கைகளை வெட்டிவிடும் தண்டனை வழங்கும் மற்றொரு நாடு உலகில் சவூதி அரேபியாவாகும்.

கண்--காது கோளாறு

கண்டுபிடிக்கப் புதிய கருவி

இலண்டன், செப். 26—

சிறுவர்களானாலும்--பெரியவர்களானாலும், 'அவர்களுக்குப் பார்வை மங்கிக்கொண்டு வருகிறதா--காதில் கோளாறு ஏதும் தோன்றி வருகிறதா' என்பதைத் தொடக்கத்திலேயே அறிந்து கொள்ள உதவும் புதிய கருவி ஒன்று பிரிட்டனில் தயாரிக்கப்பட்டுள்ளது.

மூளையிலிருந்து பெறப்படும் சில 'சிக்னல்'களைக் கொண்டு இக்கருவி--கண், காது கோளாறுகளைத் தொடக்கக் கட்டத்திலேயே தெரிவித்துவிடும்.

சில வாரங்களே ஆன குழந்தைகளானாலும், பார்வைக் குறைபாடுகள் இருந்தால் கண்டுபிடித்துவிடலாம்; வயோதிகர்களுக்குக் கண்ணில் சதை வளர்ந்திருந்தால் சோதனையைப் பயனற்றதாக்கும் இன்றைய நிலைமைக்கும் இக்கருவி தகுந்த பதிலாக அமைகிறது; இப்புதிய சோதனைக்கு நோயாளியின் ஒத்துழைப்பு தேவையில்லை; எனவே, சோதனைக்குப் பதிலளிக்காத உடல்நிலை இருந்தாலும் கவலை இல்லை என்பது பிறிதொரு சிறப்பு.

தனி ஒளி அல்லது ஒலியை உடலினுள் செலுத்தி--இதனால் மூளையில் ஏற்படுகின்ற விளைவுகளையும்--எப்படி மூளை இதைத் தொடர்ந்து இயங்குகிறது என்பதையும் பதிவு செய்கிறது இக்கருவி; இவற்றிலிருந்து ஒருவரின் கண் பார்வையில் ஏற்பட்டு வரும் கோளாறுகள் அல்லது காதில் தோன்றக்கூடிய குறைபாடுகள் ஆகியவற்றைக் கண்டுபிடிக்கும் முறையினையும் அறிவித்துள்ளனர்.

வன்முறைச் செயல்கள்

முதலமைச்சர் எச்சரிக்கை

சென்னை, அக் 13—

"பொதுவாகக் கட்சித் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினையில சில இடங்களில் வன்முறைச் செயல்கள் நடைபெறுவதும்--கழகக் கொடிகள் எரிக்கப்படுவதும்--அரசு பஸ்கள் தாக்கப்படுவதும்--குறிப்பாக விழுப்புரத்தில் ஏழைகளுக்குக் கண் ஒளி வழங்கும் விழாவில் நுழைந்து மூக்குக் கண்ணாடிகளை நொறுக்கி இருப்பதும்--ஆபாசமான வார்த்தைகளைத் தெருக்களில் எழுதுவதும்--கழகத் தலைமை நிலையமான 'அறிவக'க் கட்டடத்தைத் தாக்கியதும்--கழகத் தலைவர்களின் படங்களை உடைப்பதும் சட்டம்--அமைதி--ஒழுங்கு ஆகியவற்றுக்குப் புறம்பான தாகும்.

"இப்படிப்பட்ட செயல்களை நடத்திவரும் விஷக்கிருமிகளையும்--சமூக விரோதிகளையும் ஆங்காங்கே காவல்துறையினர் கவனித்து வருகிறார்கள்.

"பொதுவாக இதுபோன்ற வன்முறைச் செயல்களைத் தூண்டிவிடுவது, 'கழகத்தின்பால் அன்பு உள்ளவர்கள்' என்று சொல்லிக்கொள்பவர்களுக்கு அழகல்ல!

"தொடர்ந்து இதுபோன்ற வன்முறைச் செயல்கள் நடைபெறுமானால், காவல்துறையினர் சட்டப்படி உரிய நடவடிக்கையை நிச்சயம் எடுப்பார்கள்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டிருக்கிறார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரையில சென்னை நகருக்குத் தேவையான தண்ணீர் சிறிதும் தடங்கலின்றி கிடைக்கும்--வெட்டு ஏதும் இருக்காது"

என்று சென்னை மாநகராட்சி ஆணையர் ஜே. வி. எஸ். ராவ் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"இப்போது புழலேரியின் நீர்மட்டம் 38 57 அடியாகும்; சோழவரம் தேக்கத்தில் நீர் மட்டம் 55 24 அடி; பூண்டியில் 127 அடியாகும்; எனவே, இந்த ஆண்டு மழை பெய்யாவிட்டாலும் சென்னை நகருக்குத் தடங்கலின்றித் தண்ணீர் கிடைக்கும். சென்னை நகருக்கு மட்டும் நாள் ஒன்றுக்கு 5 கோடி காலன் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அறிவகம் அச்சகத்தில் [illegible] இட்டு வெளியிடப்படுகிறது.